# கோரளைப் பற்று மேற்குப் பிரதேச சபை
# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 16 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 15 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய கோரளைப் பற்று மேற்குப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய கோரளைப் பற்று மேற்குப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30,629 ஆக இருந்தது.

#### 1.3.2 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்டுள்ள விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டன.

| சுட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1769 ஆம் இலக்க 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 105,823 தொகையான வரைதற் கட்டணங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 3.9.1 | கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்கு முரணாக ரூபா 385,381 பெறுமதியில் 04 சனசமூக நிலையங்களின் சிவில் வேலைகள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | ரூபா 1,414,740 தொகையான கொடுப்பனவுகளிலிருந்து 5% நிறுத்தி வைத்தல் வரியான ரூபா 70,737 தொகை கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிகள் அதிகாரச் சட்டம் | ஊதியங்களிலிருந்து ரூபா 300 தொகையான முத்திரை வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) நிதிப்பிரமாணம் இல. 396 | 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 44,843 தொகையான மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) நிதிப்பிரமாணம் இல. 138 | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின்றி பல்வேறு தேவைகளுக்காக ரூபா 14,935 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) வடக்கு கிழக்கு மாகாணத்தின் விசேட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச | சுற்றுநிருபத்திற்கு முரணாக உறுப்பினர்களுக்கு சிற்றுண்டிகளுக்காக ரூபா 7,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | சபைகள் அதிகாரச் சட்டத்தின் 184 ஆம் பிரிவு | |
| (ஏ) | 1996/02 ஆம் இலக்க மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 1,700 தொகையானது பௌதீக மெய்மையாய்வுகளுக்காக சபை உறுப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஐ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவு | மாணவர்களுக்கு சான்றிதழ் வங்குவதற்காக நன்கொடையாக ரூபா 31,720 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான அங்கீகாரம் அமைச்சுச் செயலாளரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,953,148 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 533,341 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 2,691 | 262 | 8,862 | 1,679 | 1,688 | 6,452 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 3,373 | 2,815 | 578 | 403 | 403 | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 974 | 1,008 | 25 | 885 | 946 | 59 |
| (iv) | வேறு வருமானங்கள் | 8,223 | 8,223 | - | 2,061 | 563 | 1,498 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 14,610 | 11,758 | 2,852 | 9,973 | 9,460 | 513 |
| ஏனையவை | 4,292 | 2,538 | 1,754 | 4,595 | 2,656 | 1,939 |
| உப மொத்தம் | 18,902 | 14,296 | 4,606 | 14,568 | 12,116 | 2,452 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | 14,463 | 3,353 | 11,110 | 1,320 | 425 | 895 |
| முழு மொத்தம் | 33.365 | 17,649 | 15,716 | 15,888 | 12,541 | 3,347 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| புதவியினர் தரங்கள் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 09 | 09 |
| ஆரம்பத் தரங்கள் | 25 | 25 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 19 |
| | 35 | 54 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தாமல் மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

ரூபா 225,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 3 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தாமல் அல்லது குறைவாகப் பயன்படுதப்பட்டு இருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7 ஆண்டுகளுக்கு மேலாக பெறவேண்டிய மீதிகள் ரூபா 458,331 ஆகும்.

### 2.5.3 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடவேண்டிய பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 61,416 ஆகும்.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 52,525,370 ஆக இருந்தது.

### 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்